# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.87/2023** **நாள் :25.10.2023**

**சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத் தரவு மையத்தில் (Data Centre) அவசர பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.10.2023 சனிக்கிழமை மற்றும் 29.10.2023 ஞாயிற்றுகிழமை ஆகிய நாட்களில் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படாது**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத் தரவு மையத்தில் (Data Centre) அவசர பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.10.2023 சனிக்கிழமை மற்றும் 29.10.2023 ஞாயிற்றுகிழமை ஆகிய நாட்களில் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், புகார்களை பதிவு செய்தல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர் (Dial for Water), மற்றும் கழிவுநீர் அகற்ற முன்பதிவு செய்தல் (Dial for Septic Tank clearance), உள்ளிட்ட அனைத்து சேவைகள் செயல்படாது. மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பாராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு 30.10.2023 காலை 09.00 மணி முதல் வழக்கம் போல் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்